**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of civil procedure)**
**IN THE COURT OF SUBORDINATE JUDGE,**
**KEERANUR**
**CASE NO.OS.No.120/2021**
**Deposition of witness of plaintiff – P.W.3**
**19.06.2025**

| | | |
|---|---|---|
| **Name** | : | கண்ணதாசன் |
| **Father /Husband Name** | : | சேகர் |
| **Village** | : | புதுக்கோட்டை |
| **Taluk** | : | புதுக்கோட்டை |
| **Age** | : | 38 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 19th day of June 2025.

**சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.**
**முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. நான் புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நில வள வங்கியில் பொறுப்பு செயலாளராக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்தது. தென்னம்பாடி கிராமம் புல எண் 111/1 விஸ்தீர்ணம் 1 ஏக்கர் நிலத்தை எங்கள் வங்கியில் 02.08.1969ஆம் தேதி ரூ.1200/-க்கும், 23.04.1970ஆம் தேதி ரூ.1200/-க்கும் மொத்தமாக ரூ.2400/-க்கு மூக்கன் அம்பலத்தால் அடமானமாக வைத்து கடன் பெறப்பட்டுள்ளது. **அதற்கான பதிவேடு நகல் சாட்சி சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. புல எண் 111/1ற்கு புதிய புல எண் தொடர்பாக எவ்வித குறிப்புகளும் இல்லை. 03.06.1970 முதல் 30.06.1975 வரை பல்வேறு தேதிகளில் ரூ.1440.23 பைசா திருப்பி செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செலுத்திய தொகை மூக்கன் அம்பலம் பெயரில் வரவு வைக்கப்பட்டது. மீதமுள்ள தொகை குறித்து ஆவணம் பார்க்கவில்லை.

**(1, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது. )**

Taken down by me in Open Court, read over to the witness and acknowledgedby him and found correct.

ஒம்/—திரு.C.ராஜேஷ்,
சார்பு நீதிபதி,
கீரனூர்.